©
தமிழ்நாடு அரசு
2013

பதிவெண்: எம் 344

# கோயம்பத்தூர் மாவட்ட அரசிதழ்

சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

கோயம்பத்தூர், செப்டம்பர் 18, 2013 [எண் 7

[விஜய, புரட்டாசி 2 – திருவள்ளுவர் ஆண்டு 2044]

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

(ந.க. எண். 4848/2013, (கு.வி.–3), நாள் 2/9/2013)

**மாமன்றத்தாள்**

பொருள் : கோயம்பத்தூர் மாநகராட்சி – மாமன்ற தீர்மான எண். 173, நாள் 29–12–2009 இன்படி குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல் – திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள் வைப்புத் தொகை மற்றும் மேற்படி கட்டண விகிதங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளை 1–10–2013 முதல் நடைமுறைப்படுத்த மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய (Gazette Notification) மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை : மாமன்ற தீர்மான எண். 173, நாள் 29–12–2009.

கோயம்பத்தூர் மாநகராட்சியின் மாமன்ற தீர்மான எண். 173, நாள் 29–12–2009 இல் தீர்மானிக்கப்பட்ட திருத்திய குடிநீர் கட்டண விவரங்கள் மற்றும் உபவிதிகளை அமுல்படுத்த கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கியுள்ளது.

(அ) வீட்டு உபயோக முறையில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புக்கு உண்டான குடிநீர் கட்டண விவரம்.

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு |
|---|---|---|
| அ. | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 15,000 லிட்டர் வரை | ரூ.100.00 (குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம்) |
| 2) | 15,001 முதல் 20,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 20,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ,10.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.100.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.5,000.00 |

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக முறையில் மொத்த விநியோகம் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|
| ஆ | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 7500 லிட்டர் வரை | ரூ.5.25 |
| 2) | 7501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ,11.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.900.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.10,000.00 |

**(ஆ) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்கப்படும் குடிநீர் கட்டண விவரம்.**

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு 20 எம்.எம். | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | ஒருமாத உபயோக அளவு | | |
| 1. | 7,500 லிட்டர் வரை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| 2. | 7,501 – 10000 லிட்டர் வரை | ரூ. 13.50 | ரூ. 13.50 |
| 3. | 10,001 – 1,50,000 லிட்டர் வரை | ரூ. 18.00 | ரூ. 18.00 |
| 4. | 1,50,001 லிட்டருக்கு மேல் | ரூ. 22.50 | ரூ. 22.50 |
| | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | ரூ.525.00 | ரூ.1,350.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ10,000.00 | ரூ.15,000.00 |

**குழாய் முறையில் குடிநீர் விநியோக முறை**

| | | |
|---|---|---|
| குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.60.00 |

எனவே மாமன்றத் தீர்மானம் 173, நாள் 29–12–2009 இல் அனுமதிக்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள், வைப்புத் தொகை மற்றும் மேற்படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விகிதங்கள் உள்ளடக்கிய குடிநீர் விநியோக துணை விதிகளை 1–10–2013 முதல் நடைமுறைப்படுத்தவும் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்யவும் (Gazette Notification) மாமன்ற அனுமதி வேண்டி மாமன்றத்தால் (பொருள்) ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – கட்டண விகிதங்கள் மாமன்றத்தால் 29–12–2009 இல் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1–10–2013 முதல் நடைமுறை படுத்தலாம். (After Gazette Publication).

அனுமதிக்கலாம்.

ந.க. எண். 4848/2003/கு.வி.3

(ஒப்பம்)..................................

ஆணையாளர்

(ஒப்பம்) ..............................

வணக்கத்திற்குரிய மேயர்

மாமன்ற தீர்மான எண். 158, நாள் 29–8–2013

அலுவலக குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## கோயம்பத்தூர் மாநகராட்சி

(ந.க. எண். 4848/2013, (கு.வி.–3), நாள் 2/9/2013)

## குடிநீர் விநியோக துணை விதிகள்

கோயம்பத்தூர் மாநகராட்சியில் புதியதாக குழாய் இணைப்பு கோரும் வீடுகளுக்கு வேண்டிய இணைப்பு பெறுவதற்கும் அல்லது ஏற்கனவே உள்ளதை மராமத்து மற்றும் மாறுதல் செய்து அமைத்துக் கொள்வதற்கும் கோயம்பத்தூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் XXV / 1981) பிரிவு 194, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 432, 433, 434, 435, 436 மற்றும் இப்பிரிவுகளின் கீழ் அவ்வப்போது வெளியிடப்பட்ட திருத்தங்கள், உப பிரிவுகளின் கீழ் உருவாக்கப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகள்.

மாநகராட்சியில் புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் பாதுகாத்துப் பராமரித்தல் இவற்றில் அடங்கும். மேலும் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இனங்களும் அடங்கும். இந்த விதிகளின் கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும் குடிநீர் அளவை கணக்கிடவும், குடிநீர் குழாய் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர் குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்த துணை விதிகளில் இடம் பெறுகின்றன.

1 (அ) சொத்து விதி விதிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கப்படும்.

(ஆ) குடிநீர் இணைப்பு பெறுவதற்காக 1981 ஆம் வருடத்திய கோயம்பத்தூர் மாநகராட்சிச் சட்டம் பிரிவு, 200 (1)ன் படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தினை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரின் அனுமதியுடன் அதற்கான படிவ கட்டணம் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.125/– (ரூபாய் நூற்று இருபத்தி ஐந்து மட்டும்) செலுத்தி படிவம் ‘அ’ பெற்று ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு மாநகராட்சியின் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கப்படும். மேலும், குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீடு கட்டணங்களை மாநகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் தொடங்கப்பட வேண்டும்.

(இ) மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு தருவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் மேற்படி வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமாக 10% பணியீட்டுத் தொகையாக மனுதாரர் செலுத்த வேண்டும். இத்துடன் சாலை சீரமைப்புக் கட்டணம் மற்றும் அனுமதியற்ற கட்டிடங்களுக்கு நிர்ணயம் செய்யும் அபராத கட்டணமும் செலுத்த வேண்டும்.

(ஈ) அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை முன்பணமாக மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு உத்தரவு பெற்ற பிறகு மதிப்பீட்டுக்குரிய தொகையினை மாநகராட்சிக்குச் செலுத்திய பின்னரே குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

(உ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகையைத் தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பி வழங்கப்படமாட்டாது. மேலும் செலுத்திய தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது.

(ஊ) குடிநீர் குழாய் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் முன்னரே விண்ணப்பதாரர் அந்த கட்டிடத்திற்கு நிலுவையிலுள்ள சொத்து வரிகள் அனைத்தும் மாநகராட்சியில் செலுத்தியிருக்க வேண்டும்.

(எ) மாநகராட்சி அலுவலகத்திலிருந்து பெறப்படும் விண்ணப்ப படிவத்தில் உரிய முறையில் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை இணைத்துக் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

2. வீட்டு உபயோகத்திற்கோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் மட்டுமே குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் (Tap Rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளை (Tap Rate) அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள்ளும் உபவிதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அளவுமானி குடிநீர் இணைப்பாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படாமல் இருப்பின் மறு அறிவிப்பின்றி குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

3. (அ) வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானதா (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத (Non - Domestic) பயன்பாட்டிற்கானதா என்பதை கோயம்பத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, 200 வது பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு தருணத்திலும் பயன்பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

(ஆ) கீழ்க்கண்ட இனங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் போது மனுதாரர்முழு/பகுதி கட்டிடங்களுக்கு உபயோகப் படுத்தினாலும் வீட்டு உபயோகம் அல்லாத முறையில் கட்டணம் வசூலிக்கப்படும்.

1. தயாரிப்பு நிறுவனம், வியாபார நிறுவனம் , தோட்டங்கள் (Garden), கட்டிட கட்டுமானங்கள், நீரூற்று, நீச்சல் குளம், ஆடம்பரம் மற்றும் இயந்திர பயன்பாடுகள், கால்நடை வியாபாரம் செய்யும் இடங்கள், நிறுவனங்கள், தனியார் அலுவலகங்கள், தனியார் மருத்துவ மனைகள், தனியார் மருந்தகங்கள், தனியார் கால்நடை மருந்தகங்கள், தங்கும் விடுதிகள், பொழுதுபோக்கு இடங்கள், தங்குமிடங்கள், திரையரங்குகள் மற்றும் இதர வியாபாரம் செய்யும் இடங்கள் ஆகியவைகளிலுள்ள இணைப்புகள் “குடியிருப்பு அல்லாத இணைப்புகள்” எனக் கருதப்படும்.

2. வியாபார நிறுவனங்களின் கட்டிடங்கள், இரயில்வே துறைக்கு சம்பந்தப்பட்ட கட்டிடங்கள், பாதுகாப்பு துறை நிறுவனங்களின் பலமாடி கட்டிடங்களுக்கு கொடுக்கப்படும் குடிநீர் இணைப்பு வீட்டு உபயோகமில்லாத இணைப்பாக கருதப்படும்.

3. வியாபார இணைப்பு என்பது வியாபாரம் மற்றும் தொழில் நடைபெறும் கட்டிடங்களுக்கு விநியோகம் செய்யப்படும் இணைப்பு என பொருள்படும். இதில் சிற்றுண்டிச்சாலைகள், உணவு விடுதிகள், டீக்கடைகள், காப்பிகடைகள், சினிமா தியேட்டர்கள் மற்றும் இதர வியாபாரம் செய்யும் இடங்கள் அடங்கும்.

4. தொழிற்சாலை இணைப்புகள் என்பது தொழில் நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் உரிமம் பெறப்பட்ட எல்லா தொழில் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் இணைப்புகள் எனப் பொருள்படும். சோடா தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலைகள், குடிசைத் தொழிற்சாலைகள் மற்றும் அரிசி ஆலைகளும் இதில் அடங்கும்.

குறிப்பு – இதில் வீட்டு உபயோக இணைப்பு, வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பு மற்றும் வியாபார இணைப்பு என வகைப்படுத்தப்பட்ட இணைப்புகள் தவிர மற்றவை அனைத்தும் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இணைப்புகளாக வகைப்படுத்தப்படும்.

5.மாநகராட்சிக்கு சொந்தமானதும், ஆளுகைக்கும், பராமரிப்பிற்கும் உட்பட்டதுமான கட்டிடங்களில் வாடகைதாரர்கள் / குத்தகைதாரர்கள் குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், குடிநீர்க் குழாய் இணைப்பு மீட்டர் முறையில் வழங்கப்படும். குடிநீர் பயன்பாட்டின் அடிப்படையில் வீட்டு உபயோக இணைபப்பாகவோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பாகவோ கணக்கிட்டு கட்டணம் வசூலிக்கப்படும்.

விளக்கவுரை:

இத்துணை விதிகளில் இடம் பெறும் "வீடு" எனும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைக்கு சொத்து வரிக்காக ஒரே பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும்.

4. (அ) ஒரே இணைப்பின் வாயிலாக வீட்டு உபயோகம் மற்றும் வீட்டு உபயோகமில்லாத பிற பயன்களுக்கும் சேர்த்து எடுக்கப்படும் குடிநீர், வீட்டு உபயோகம் அல்லாத குடிநீருக்குரிய கட்டண முறையில் வசூலிக்கப்படும்.

(ஆ) ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் இணைப்புகள் அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீர்ப் பயன்பாட்டின் அடிப்படையில் வீட்டு உபயோகம் மற்றும் வீட்டு உபயோகம் அல்லாத விகிதங்களில் குடிநீர்க் கட்டணம் வசூலிக்கப்படும்.

(இ) சொத்து வரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதியதாகக் கட்டிடம் கட்டும் போது குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

(ஈ) கூடுதல் கட்டிடம் கட்டும் போதும், கட்டிடப் பழுதுகள் பார்க்கும் போதும், மாநகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டாலோ அவ்வாறு பயன்படுத்தப் படுவதாக மாநகராட்சி ஆணையர் / மாநகராட்சியின் அலுவலர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத உபயோகமாகக் கருதப்பட்டு வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர்க் கட்டணம் வசூலிக்கப்படும்.

(உ) கட்டிட வேலை முடிந்ததும் இணைப்புதாரர், மாநகராட்சி ஆணையாளருக்கு விண்ணபப்படிவங்களின் மூலம் வீட்டு வரி விதிப்பு தொகையினை மாற்றம் செய்த பிறகு கட்டிட வரிவிதிப்பு புத்தகத்தில் விதிக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு கட்டணம் மற்றும் கூடுதல் அபராத தொகை அல்லது வரைபட அனுமதியற்ற கூடுதல் கட்டிடத்தின் அளவுகளின் அடிப்படையில் குடிநீர் இணைப்புக்கான அபராதத் தொகை செலுத்தி குடிநீர் கட்டண விகிதத்தை மீண்டும் வீட்டு உபயோக முறைக்கு மாற்ற ஆணை பெறுதல் வேண்டும். விண்ணப்பதாரரின் கூற்று சரியென உறுதி செய்த பிறகு குடிநீர்க் கட்டண விகிதம் மாற்றப்படும்.

(ஊ) தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–அவர்களின் அங்கீகாரத்துடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறைகளுடன் மாநகராட்சி மன்றம் தமது மாநகராட்சி எல்லைக்கு அருகில் உள்ள யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

5. மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள்

(அ) மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வகையான குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாகவே செய்யப்பட வேண்டும்.

(ஆ) தகுதிகள்

மாநகராட்சியிடம் உரிமம் கோரி விண்ணப்பிக்கும் பிளம்பர்கள் கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

1. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. ITI குழாய் வேலை செய்யும் பிரிவில் Plumber Trade (National Council for Vocational Training) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. குழாய் பொருத்தும் பணிகளில் குறைந்த பட்சம் இரண்டாண்டுகள் முன் அனுபவம் உள்ளதற்கான சான்றிதழ்கள் ஒப்படைக்க வேண்டும்.

4. முந்தைய பணிக்காலத்தில் பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து தரமான வேலைகளை செய்ததற்கான நன்னடத்தைச் சான்றிதழ் பெற்று ஒப்படைக்க வேண்டும்.

5. மேலும் , வயது 21 முதல் 45 வரையில் புதிய பிளம்பர் உரிமம் வழங்கப்படும், 60 வயது வரையில் உரிமம் நீட்டிப்பு செய்யப்படும்.

மேலும், அரசாணை எண். 523 ந.நி. மற்றும் கு.வ. துறை, நாள்.19.09.1995 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்து,

6. ரூ.1,00,000/-ற்கான கடன் தீர்வை சான்றிதழ் (Solvency Certificate) ஒப்படைக்க வேண்டும். கடன் தீர்வை சான்று ஒப்படைக்க இயலாதவர்கள் கடன் தீர்வை சான்றுக்கு மாற்றாக ரூ.1,00,000/-ஐ ரொக்கமாகவும் செலுத்தலாம்.

7. காப்பீட்டுத் தொகையாக ரூ.1,00,000/- செலுத்த வேண்டும்.

8. தகுதியுடையவர்களுக்கு வருடாந்திர உரிமம் புதுப்பித்தல் கட்டணமாக ரூ. 500/- செலுத்த வேண்டும்.

9. மாநகராட்சி விதிகளுக்குப் புறம்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டால் பிளம்பர் உரிமம் ரத்து செய்யப்படும்.

6. (அ) ஒவ்வொரு சொத்துவரி விதிக்கப்பட்ட குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும் தான் வழங்கப்படும். அத்தகைய குடிநீர் இணைப்பைக் கட்டுப்படுத்த நீர் வரத்து கட்டுப்பாட்டு இதழ் (Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு குடிநீர் இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப்படவிருக்கும் பயன்பாட்டில் உள்ள குடிநீர் இணைப்புகளிலிருந்தோ குடிநீர் வழங்கப்படமாட்டாது.

(ஆ) <u>அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு</u>

1. அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் போது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குடிநீர் குழாய் இணைப்பு மட்டும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

2. அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனிதனியாக வைப்புத் தொகை வசூல் செய்யப்படும்.

3. ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்திலும் பல வரி விதிப்புகள் இருந்தாலும் குடியிருப்பில் வசிக்கும் நபர்களுக்குத் தக்கவாறு கணக்கீடு செய்து மொத்த விநியோக முறையில் வடிவமைப்பு செய்து குடிநீர்க் குழாய் இணைப்பு மாநகராட்சிப்பொறியாளர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்படும். தனித்தனி இணைப்புகள் வழங்கப்படமாட்டாது.

7. பொது மக்களால் அருந்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் அனைத்து வழிபாட்டுத் தலங்களுக்கு கொடுக்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் கீழ்க்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்படும்.

(அ) வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்பு விதிகளே இதற்கு பொருந்தும்.

(ஆ) அந்தந்த வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகப் பொறுப்பாளர்கள் மேற்படி குழாய்களை அமைக்கவும், அவைகளைப் பராமரிக்கவும் அல்லது தேவைப்படாத காலத்தில் அவற்றை நீக்கவும் ஆகும் செலவுகளை அவர்களே ஏற்க வேண்டும். மேற்படி இடங்களில் வைக்கப்படும் குழாய்கள் 15 மி.மீ விட்டமுள்ளதாகவும், நீர் வீணாக்காமல் தானே மூடிக் கொள்ளும் வகையானதாக திருகு குறுங்குழாய் (வாட்டர் டேப்) பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.

(இ) குடிநீர் உபயோகத்திற்கு மட்டும், குடிநீர் இலவசச் சலுகை இன்றி குடியிருப்பு விநியோக முறையில் உபயோகித்த அளவிற்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும்.

(ஈ) மேற்படி வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகத்தால் நடத்தப்படும் கடை மற்றும் வியாபார கட்டிடங்களுக்கு வீட்டு உபயோகமில்லாத முறையில் மட்டுமே தனியே குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும்.

(உ) இந்த நிறுவனங்கள் விநியோக இணைப்புகான மதிப்பீட்டுத் தொகை மற்றும் வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமும் செலுத்த வேண்டும்.

8. (அ) இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளில் ஒரு நிமிடத்திற்கு 5 லிட்டர் என்ற விகிதத்தில் தண்ணீர் விழும்படி கீழ் திருகு குறுங்குழாய் (Ferrule) பொருத்தப்பட்டு வீட்டிணைப்பிற்கு செல்லும் தண்ணீர் கட்டுப்படுத்தப்படும். குடிநீர் இணைப்புகளில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும், குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்குத் தக்கபடி கீழ்க்கண்ட நிர்ணய அளவுகளின்படி அமைக்கப்படும்.

1. 15 எம். எம்.விட்டம் ஜி. ஐ. (G.I) குழாய் இணைப்பு – 10 எம். எம். திருகு குறுங்குழாய் (Ferrule)

2. 20 எம். எம்.விட்டம் ஜி. ஐ. (G.I) குழாய் இணைப்பு – 15 எம். எம். திருகு குறுங்குழாய் (Ferrule)

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதனை முடிவுசெய்ய மாநகராட்சி பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும். எல்லா இணைப்புகள், திருகு குறுங்குழாய்கள் மற்றும் இதர உபகரணங்கள் சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப் பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15 எம்.எம்.–க்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை மாநகராட்சி பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய நிர்ணய நிறுவனத்தின் விளக்கக் குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

(ஆ) குடிநீர் விநியோகிக்க வேண்டிய ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கு முதன்மைக் குழாயில் இருந்து (Distribution main) கீழ்த்திருகு உள்ள கருவி (Screw Down Ferrule) சீராக குடிநீர் கிடைக்க நீர் கட்டுப்படுத்தும் உபகரணம் (Flow Control) அமைப்புடன் திறந்து மூடக் கூடிய அடைப்பான் (Stop Cock) இணைத்து குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

(இ) சாக்கடை, புதை வடிகால் மற்றும் சிறுபாலம் செல்லும் இடங்களில் குறுக்காக குடிநீர் இணைப்பு குழாய் கொண்டு செல்ல தேவையிருப்பின் குழாய் சேதம் ஏற்படக் கூடியதாகவோ அல்லது தொற்று வியாதிகள் கலக்கக் கூடியதாகவோ உள்ள இடமென்று மாநகராட்சிப் பொறியாளர் கருதினால் அவ்விடங்களில் செல்லும் இணைப்பு குழாய் ஒப்புக் கொள்ளும் அளவிற்கு நீளம், விட்டம், கனம் உள்ள இரும்புக் குழாய்கள் வழியே செல்லும் படியாக அமைத்து குடிநீர் இணைப்பு பெறலாம்.

9. குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தின் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக் குழாய் இணைப்புகள் மாநகராட்சிப் பொறியாளரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை, அளவு ஆகியவை மாநகராட்சிப் பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

10. (அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் குடிநீர் இணைப்புகள் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் யாவையும் மாநகராட்சிப் பொறியாளர் அல்லது மாநகராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்தப்படல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளையும் மாநகராட்சி அலுவலர்கள் பார்வையிட வசதி செய்து தரவேண்டும். அவ்வாறு பார்வையிட தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாதவை எனக் கருதி அக்குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

(ஆ) குடிநீர் இணைப்பில் உள்ள திருகு குறுங்குழாய் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிந்தும் தண்ணீர் மாநகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

(இ) குடியிருப்பு மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டால் குடியிருப்பு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தினுள், குடியிருப்புதாரரால் கட்டப்பட்டுள்ள குடிநீர் சேமிக்கும் தொட்டியில் நிலமட்டத்திற்கு 30 செ.மீ. ஆழத்திற்கும் அதிகமாக பதிக்கப்படாமல் இணைப்பு குழாய் இருக்கும் வண்ணம் இணைப்பு வழங்கப்படும்.

(ஈ) குழாய் இணைப்பிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மின்மோட்டார் வைத்து உறிஞ்சி சேமிப்பு தொட்டியில் குடிநீரை சேமிக்கக் கூடாது.

(உ) வீட்டிணைப்புகளின் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றும் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித அறிவிப்பின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

11. (அ) மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் தர அளவீடு (Specification) அளவுமானி மாநகராட்சியின் பொறியாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் மாநகராட்சி அலுவலர்களால் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும் அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் (மாதமும்) கணக்கிடப்பட்டு குடிநீர் கட்டணத் தொகை வசூலிக்கப்படும்.

(ஆ) மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் தர அளவீடு (Specification) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கி பொருத்த வேண்டும். வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரால் அளவுமானிகள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் சொந்தச் செலவில் அளவுமானியை பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுது பார்த்தல் பணியை மாநகராட்சிப் பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு மாத காலத்திற்குள் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் குடிநீர்க் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

12. ஒவ்வொரு குடிநீர் குழாய் இணைப்பு பெறுவதற்கும் வைப்புத்தொகை செலுத்த வேண்டும். வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டண விகிதங்கள் கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

**(அ) வீட்டு உபயோக முறையில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புக்கு உண்டான குடிநீர் கட்டண விவரம்.**

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு |
|---|---|---|
| அ. | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 15,000 லிட்டர் வரை | ரூ.100.00 (குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம்) |
| 2) | 15,001 முதல் 20,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 20,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ,10.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.100.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.5,000.00 |

| வரிசை எண். | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக முறையில் மொத்த விநியோகம் 20 எம்.எம்.விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|
| ஆ | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1) | 7500 லிட்டர் வரை | ரூ.5.25 |
| 2) | 7501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ.6.00 |
| 3) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ.8.00 |
| 4) | 1,50,000 லிட்டருக்கும் மேல் | ரூ,11.00 |
| | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | ரூ.900.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ.10,000.00 |

**(ஆ) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்கப்படும் குடிநீர் கட்டண விவரம்.**

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு 20 எம்.எம். | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | ஒருமாத உபயோக அளவு | | |
| 1. | 7,500 லிட்டர் வரை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| 2. | 7,501 – 10000 லிட்டர் வரை | ரூ. 13.50 | ரூ. 13.50 |
| 3. | 10,001 – 150000 லிட்டர் வரை | ரூ. 18.00 | ரூ. 18.00 |
| 4. | 1,50,001 லிட்டருக்கு மேல் | ரூ. 22.50 | ரூ. 22.50 |
| | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | ரூ.525.00 | ரூ.1,350.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ10,000.00 | ரூ.15,000.00 |

குழாய் முறையில் குடிநீர் விநியோக முறை

| | | |
|---|---|---|
| குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.50.00 |
| | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.60.00 |

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடிநீர் கட்டணத்தில் 10 சதவிகிதம் உயர்வு செய்து மாமன்ற ஒப்புதலுடன் வசூலிக்கப்படும். நகர்ப்புர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் BSUP திட்டத்தின் கீழ் குடிநீர் வீட்டிணைப்புகளுக்கான வைப்புத்தொகை பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்களிக்கவும், குடிநீர் வீட்டிணைப்புகளுக்கான சேவைக் கட்டணம் ரூ.250/– மட்டும் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது. (மாமன்ற தீர்மான எண். 83 , நாள். 12.09.2011).

13. (அ) லாரி மூலம் விநியோகம்

தனியாருக்குச் சொந்தமான லாரிகளின் மூலமாகவோ , பொது மக்களால் அமைக்கப்படும் லாரிகள் மூலமாகவோ விநியோகிக்கப்படும் குடிநீர் கட்டணத்தை மாநகராட்சி வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு முடிவு செய்யலாம்.

சூழ்நிலைக்கேற்ப கட்டணவிகிதங்களை எப்போது வேண்டுமானாலும் மாற்றம் செய்யவும் அல்லது திருத்தி அமைக்கவும் மாநகராட்சி வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவிற்கு உரிமை உண்டு.

அவசரம் மற்றும் மிகவும் அத்தியாவசிய தேவை கருதி லாரி குடிநீர் விநியோகத்தினை மாநகராட்சி ஆணையாளரால் முடிவு செய்யப்படும்.

(ஆ) தற்காலிக குடிநீர் இணைப்பு

தற்காலிக குடிநீர் இணைப்புகள் பொருட்காட்சி , சர்க்கஸ் , மத சம்பந்தமான விழாக்கள் போன்ற பொதுமக்கள் தற்காலிகமாக கூடுமிடங்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்கலாம் என மாநகராட்சி ஆணையாளர் கருதினால் உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாநகராட்சிப் பொறியாளர் ஒப்புதலுடன் கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

குறிப்பு

1. அளவுமானி முறைப்படி ஒரு மாத குறைந்த பட்ச கட்டணம் ரூ. 1,350.00 (ரூபாய் ஆயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும்) செலுத்த வேண்டும்.

2. வீட்டு உபயோகம் அல்லாத முறையில் கணக்கிடப்படும்.

3. தற்காலிக குடிநீர் இணைப்பு அதிக பட்சமாக 90 நாட்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

14. (அ) அளவுமானி முறையிலான கட்டணத்தை குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் மாநகராட்சி வசூல் மையங்களில் செலுத்த வேண்டும்.

(ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் மாநகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் மாநகராட்சியின் ஆணையர் / பொறியாளர் / அதிகாரம் பெற்ற அலுவலர்கள் எப்போது வேண்டுமானாலும் அறிவிப்பு வழங்கி குடிநீர் இணைப்பை துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் இழப்புகளுக்கும், சேதங்களுக்கும், குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும். எவ்விதத்திலும் மாநகராட்சி பொறுப்பு ஏற்காது.

(இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள சட்ட விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணமாக ரூ. 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்), இணைப்பு கட்டணமாக ரூ. 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) மேலும் சாலை சீரமைப்பு கட்டணமும் சேர்த்து கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி வசூலிக்கப்படும்.

1. ஏற்கனவே கூடுதல் வைப்புத் தொகை செலுத்தாத பட்சத்தில் இந்த உபவிதிகளில் கண்டுள்ளபடி வைப்புத் தொகையை வீட்டு உரிமையாளரால் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ செலுத்தப்பட வேண்டும்.

2. சொத்துவரி, குடிநீர்க் கட்டண நிலுவை முழுமையும் (இந்த வகைக்காக துண்டிக்கப்பட்டதின் பொருட்டு) செலுத்த வேண்டும்.

3. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டிடம் கட்டப்பட்ட பின் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பானது, மாநகராட்சி வரைபட அனுமதி பெற்ற புதிய கட்டிடமாக இருந்தால், ஏற்கனவே குடிநீர் இணைப்பு பெறப்பட்ட கட்டிட வரிவிதிப்பு புத்தகத்தின் அடிப்படையில் மறு இணைப்பு வழங்கப்படும். வரிவிதிப்பு புத்தகத்தின் வரிவிதிப்பு எண்ணில் மாற்றம் இருக்குமானால் மறு இணைப்பு வழங்கப்படமாட்டாது. புதிய குடிநீர் இணைப்பாகத்தான் வழங்கப்படும்.

4. ஏற்கனவே பெறப்பட்ட குடிநீர் இணைப்பிலிருந்து கூடுதல் இணைப்புக் குழாய்கள் அல்லது அசையும் குழாய்கள் அல்லது அது போன்ற ஏதாவது அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டால் குடிநீர் இணைப்பு உடன் துண்டிக்கப்படும்.

15. (அ) குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு மாத பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிருக்கும் காலத்திற்கு முன் கூட்டியே ஆணையாளருக்கு எழுத்து மூலமாக தகவலை தெரிவித்து குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்து கொள்ளலாம். இவ்வாறு இருக்கும் காலத்திற்கு தான் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும் போது துண்டிப்பு கட்டணம் ரூ. 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) மறு இணைப்பு கட்டணம் ரூ. 500/–ம் (ரூபாய் ஐந்நூறு மட்டும்), சாலை மேம்பாட்டு கட்டணமும் ஒவ்வொரு முறையும் வசூலித்த பிறகு மறு இணைப்பு வழங்கப்படும்.

(ஆ) குடிநீர் இணைப்புக்கான ஒப்பந்தத்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ துண்டிப்பு செய்ய வேண்டியிருப்பின், வீட்டு உரிமையாளரால் இணைப்பு துண்டிப்பு கட்டணம் ரூ. 500/–ம் (ரூபாய் ஐந்நூறு மட்டும்) ஒரு மாதம் / 30 நாட்களுக்கு முன்னதாகவே மாநகராட்சி வசூல் மையங்களில் செலுத்தி, விண்ணப்பித்து குடிநீர் இணைப்பினைத் துண்டித்துக் கொள்ளலாம்.

16. (அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் அளவு கணக்கிடுவதில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ரூ. 250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) வைப்புத் தொகையாகச் செலுத்தி எழுத்து மூலம் மனு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப்பின் தெரியவந்தால் வைப்புத் தொகை திரும்பத்தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

17. (அ) குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒருமாத காலத்திற்கு மேலாக பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த மாதத்தில் பயன்படுத்தியதற்கான அளவுகளில் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் மிகப் பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின் கொள்ளளவிற்கு ஏற்ப அளவுகள் மேற்கண்ட காலகட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட குடிநீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து மாநகராட்சி ஆணையர் / மாநகரப் பொறியாளரின் முடிவே இறுதியானதாகும்.

(ஆ) வீடு பூட்டப்பட்டு இருந்து அதனால் மீட்டர் அளவு எடுக்க முடியாமல் போனால் குறைந்த பட்சத் தொகை வசூலிக்கப்படும். கட்டணத்தொகை அறிவித்த பின்பு வீடு திறந்த பிறகு மீட்டர் அளவு எடுக்கப்பட்டால் அதுவே கணக்காக எடுக்கப்பட்டு அதிகப்படி கட்டணம் இருந்தால் அதிகப்படியுள்ள தொகை அடுத்த கணக்கெடுப்பு பட்டியலில் சேர்த்து வசூலிக்கப்படும்.

(இ) குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீடு 2 கணக்கெடுப்புகளுக்கு மேல் குடியின்றி மூடப்பட்டு இருந்தால் முன்னறிவிப்பு இன்றி குழாய் இணைப்பு துண்டிக்கப்படும். வீட்டுக்காரர் அல்லது குடியிருப்பவர் மீண்டும் கட்டிடத்திற்குக் குடிவந்த பின்னர் அவரது விண்ணப்பங்கள் சமர்ப்பித்த பின்பு மீண்டும் இணைப்பதற்கான இணைப்புக் கட்டணத்துடன் துண்டிப்புக் கட்டணத்தையும் செலுத்திய பின் குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்கப்படும்.

எந்த ஒரு மாத காலத்திற்கும் குடிநீர் உபயோகமில்லை என்ற காரணத்திற்காக குடிநீர் கட்டணம் குறைப்பு அனுமதிக்கப்பட மாட்டாது.

**18.**குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு (Rain Water Harvesting Structure) அமைத்திருப்பதுடன், வெளி செல்லும் கழிவுநீரை வெளியேற்ற புதை வடிகால் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கும் நிலையில் மாநகராட்சி தெரிவிக்கும் வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதைவடிகால் இணைப்புக்கும் விண்ணப்பம் செய்ய வேண்டும். மேலும், விண்ணப்பிக்கும் பகுதியில் இத்திட்டம் இல்லாதிருந்தால் வெளியேறும் கழிவுநீரை தனியாக சேகரிக்கும் தொட்டி (Cess Pool / Septic Tank) வீட்டு வளாகத்திற்குள் அமைக்க வேண்டும்.

**19.** குடிநீர் குழாய்களை தொட்டி அல்லது சேமிப்பு தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 24 மற்றும் 25 க்குப் பொருந்தாது.

**20.** ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் மாநகராட்சியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டும். பழுது ஏற்பட்டால் மாநகராட்சி அனுமதி பெற்று அவருடைய சொந்த செலவில் சரி செய்து கொள்ள வேண்டும்.

**21.** குடிநீர் குழாயில் உள்ள நிலையில் பரிசோதனை செய்யும் பொருட்டு அந்தக் குடிநீர் உபயோகம் அல்லாத பயன்பாட்டிற்கு குழாயின் இணைப்பில் உள்ள குழாய் அல்லது இணைப்புகளை ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும்போதோ அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புகளோ பழுதுபட்டு இருந்தால் இதை பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ ஆணையாளர் / மாநகரப்பொறியாளர் குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கும் ஒரு மாதம் கால அவகாசம் கொடுத்து ஓர் அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரையறைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும், இணைப்புகள் சரி செய்யப்படவில்லை என்று தெரியவருமேயானால், பழுது காரணமாக இணைப்புகளில் நீர் வீணாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக்கருதினால் ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் இந்தக்குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்பை துண்டிப்பு செய்து விட்டு இணைப்பிற்கு குடிநீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

**22.** வீட்டு உபயோக முறையில் வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கும் குடிநீரை, ஆணையாளர் / மாநகரப் பொறியாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, வீட்டு உபயோகம் அல்லாத பிற காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் வீட்டு உபயோகப் பயன்களுக்கான குடிநீரை வீட்டு உபயோகம் அல்லாத பயன்களுக்கு பயன்படுத்துவதாக ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் அறியவரின் அல்லது அவ்வாறு நம்புதற்கு காரணங்கள் இருந்தாலும் அவர் தாம் அறிவிக்கும் நாளிலிருந்து வீட்டு உபயோகத்திற்கு அல்லாத விகிதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை தன்னுடைய ஆதாரப்புள்ளி விபரங்களின் அடிப்படையில் கேட்டுக்கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் செலுத்தத் தவறினால் அந்த வீட்டிணைப்பை அறிவிப்பு வழங்கி துண்டித்துவிட ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் உத்தரவிடலாம்.

**23.(அ)** மாநகராட்சி அனுமதி பெறாமல் குடிநீர் இணைப்புகள் வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்போரால் அமைக்கப்பட்டிருப்பது அனுமதிக்கப்பட்ட மாநகராட்சி வெளிப்புற பணியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டால் உடன் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். மேலும், அரசாணை எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி. III) நாள். 21.06.2002ன் படி கீழ்க்கண்ட அபராதத் தொகை வசூலிக்கப்படும்.

1.வீட்டு குடிநீர் இணைப்பு ஒன்றுக்கு ரூ.3,000/– (ரூபாய் மூன்று ஆயிரம் மட்டும்)

2.வீட்டு இணைப்பு அல்லாத ஏனைய இனங்கள் ஒன்றுக்கு ரூ.5,000/– (ரூபாய் ஐந் து ஆயிரம் மட்டும்)

**(ஆ)** மாநகராட்சியில் இருந்து வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்றுக் குழாய் அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்புக்குழாய் அல்லது அசையும் குழாய் அது போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கப்படகூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும். மீண்டும் ''மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்தமாட்டேன்'' என்ற உத்தரவாதத்துடன் அரசாணை எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி. III), நாள். 21.06.2002ன் படி அபராதத் தொகை பெற்றுக் கொண்டபின்பு தான் குடிநீர் உபயோகம் அல்லாத பயன்பாட்டிற்கு இணைப்பு வழங்கப்படும். இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின்கருவிகளை வைத்து ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) வீட்டிணைப்பில் சட்டத்திற்கு புறம்பாக மின் மோட்டாரை பொருத்தி இருப்பதை கண்டறிந்து துண்டிக்கப்பட்ட இணைப்பிற்கு அபராத தொகை ரூ.7,000/– (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) மூன்று வருட குடிநீர் வரியின் தொகுக்கப்பட்ட தொகை, பறிமுதல் செய்த பொருட்களுக்கு திருப்பி ஒப்படைக்க ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) கூடுதல் வைப்புத்தொகை ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) மறு இணைப்பு வழங்குதல் ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆகியவை செலுத்தப்பட்ட பிறகு ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் உத்தரவின் அடிப்படையில் மறு இணைப்பு வழங்கப்படும்.

24. பொதுக்கழிப்பிடம், சிறுநீர் கழிக்குமிடம், மலக்கழிப்பிடம் ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புக்கொடுக்கப்பட வேண்டுமானால் இதற்காக ஒரு தொட்டியை அமைத்து அதற்குத் தேவையான உபகரணங்களுடன் பொருத்தி ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் முடிவு செய்யுமிடத்தில் நிறுவப்பட வேண்டும்.

25. கொதிகலன்களுக்கு மாநகராட்சியின் குடிநீர் பகிர்மான குழாய்களிலிருந்து, தண்ணீர் தேவைப்படுமானால் அதற்காக தனியாக தொட்டியிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்குத் தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

26. தீ விபத்து நேரிடும் சமயங்களைத் தவிர மற்ற சமயங்களில் மாநகராட்சியின் ஆணையாளர் / மாநகரப் பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாதவர்களால் பிரதானக்குழாய் அல்லது பகிர்மானக் குழாய்கள், திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க்கருவிகள் அவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.

27. ஆணையாளர் / மாநகரப்பொறியாளர், அவர்கள் உத்தரவின் பேரில் திருமணம் மற்றும் இதர சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிடத்திற்கு தற்காலிகமாக இணைப்புகள் வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிகளுக்கு ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ. 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) அதை திரும்பத் துண்டிக்கும் போது ரூ. 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15 எம்.எம். அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 3 மீட்டர் கொண்டதாக இருக்கும். இணைப்பு கேட்டவர்களோ அல்லது அவ்வாறு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும் கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும் செலவிலும் செய்து கொள்ள வேண்டும். கூடுதல் குழாய்கள் / திறப்பான்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாயிற்கும் / திறப்பான்களுக்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. 50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) வீதம் வசூல் செய்யப்படும். மேற்படி, தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் அதிகபட்சமாக 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

28. (அ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியை எவரும் வைக்கப்பட்டுள்ள முத்திரையை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியின் பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அல்லது அதன் மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவைப் பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ கூடாது.

(ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானி கருவி கணக்கீடு பதிவு செய்வதற்கு முன்னால் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

(இ) அளவுமானி (அளவு) பதிவு செய்வதைத் தடுக்க அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை இயங்காமல் இருக்கச் செய்வதோ கூடாது.

29. (அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட எல்லா வீட்டு இணைப்புகளுக்கும், வீட்டு இணைப்பு அல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கும் இந்த துணை விதிகள் பொருந்தும். துணை விதிகளின் படி மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்களும் பொருந்தும். அவ்வாறு உள்ள வீட்டு இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய எல்லா கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்ட வீட்டு இணைப்புகள் அதிகாரப்பூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகள் மாநகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாய் கருதி அரசாணை எண். 81, ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி. III), நாள். 21.06.2002ன் படி வீட்டு உபயோக இணைப்புகளுக்கு அபராத தொகையாக ரூ. 3,000/– (ரூபாய் மூன்று ஆயிரம் மட்டும்) வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புக்கு ரூ. 5,000/– (ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) வீதம் வசூல் செய்யப்படும். தொடர்ந்து குற்றம் செய்யப்படும் பட்சத்தில் அறிவிப்பு வழங்கி குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்படும்.

(ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள், திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

(இ) புதிதாக குடிநீர் உபயோகம் அல்லாத பயன்பாட்டில் இணைப்பு பெற விரும்புகிறவர்கள் மாநகராட்சிக்கு நடப்பு அரையாண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

30.குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர் பற்றாக்குறை இருப்பதாலோ அல்லது குடிநீர் வீட்டு உபயோக பயனுக்காகவோ அல்லது பிற உபயோகத்திற்காகவோ வழங்கப்படும் குடிநீர் தவறுதலாக பயன்படுத்துவதற்காகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே பழுதாக்கப்படுகிறது என்று மாநகராட்சிக்கு தெரியவந்தாலோ 24 மணிநேர அவகாச எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து இணைப்பை துண்டிக்கும் உரிமை மாநகராட்சி ஆணையாளருக்கு / மாநகராட்சிப்பொறியாளருக்கு உண்டு. இத்தகைய சமயங்களில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் மாநகராட்சி மன்றத்தையோ அல்லது ஆணையாளரையோ / மாநகரப்பொறியாளரையோ பொறுப்பாக்க முடியாது.

31. ஒவ்வொரு இணைப்பின் தகுதியையொட்டி தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.

32. துணை விதி 23 தவிர மேற்கண்ட விதிகளை மீறும் அல்லது மாநகராட்சி சொத்திற்கு சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவர். ரூ.500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) வரை அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து செய்யப்படும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால், தொடர் அபராதமாக நாள் ஒன்றுக்கு ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைக்கப்படுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

33. தண்டனை

(அ) இந்த துணை விதிகளில் உள்ள விதி, உபவிதிகளை மீறி நடப்பவர் எவராயினும் அல்லது 7 (ஏழு) வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத்தவறினாலும் அவர் தண்டனைக்கு உரியவர் என கருதப்படுவார். அவருக்கு ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வரையிலும் அபராதம் விதிக்கப்படும்.

(ஆ) மேற்படி, குற்றத்தில் முதன் முறையாக ஒரு முறை தண்டிக்கப்பட்ட பின் குற்றம் தொடர்ச்சியாக மீறப்படுமானால் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.25/– (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) வீதம் அபராதம் விதித்து தண்டிக்கத்தக்கவர் ஆவார்.

34. பொது குடிநீர் குழாய்க்கான துணை விதிகள்;

(அ) மிக மிக அத்தியாவசிய இனங்களின் பொருளாதார அளவில் மிகவும் வறுமை நிலையில் உள்ள மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் பொதுக்குடிநீர் குழாய்கள் அமைக்க வேண்டும் எனில் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் பெற்று தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் அங்கீகாரத்துடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையரைகளுடனும் அமைக்கலாம்.

எவரும் பொதுக்குடிநீர் குழாய், ஆழ்குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ, வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர், கிணற்று நீர் வெளியேறி வீணாகச் செல்லும்படி செய்யக்கூடாது.

(ஆ) 1. எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

2. குடும்பப் பயன்களுக்காக அன்றி பிற உபயோகங்களுக்கு பொது குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் பிடிக்கக்கூடாது.

3. பொது குடிநீர் குழாயிலோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ, துணிகள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ, பிராணிகளை குளிப்பாட்டுவதோ கூடாது.

4. மற்றவர்கள் காத்திருக்கையில் பொது குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

(இ) விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பிற்கு இன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்புக்காக பொருத்தப்பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.

(ஈ) தீ விபத்தின் போது தீயை அணைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொதுக் குடிநீர் குழாயில் இருந்தோ, தீ அணைப்புக் குழாயிலிருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக்கூடாது. இவ்வாறு தீயணைப்புக்காக அன்றி பிற உபயோகங்களுக்காக பொது குடிநீர் அல்லது தீயணைப்பு குழாயில் இருந்து சுயநல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் நீர் எடுக்கப்பட்டால் அவர் துணை விதிகளை மீறி நடந்ததாக கருதப்படுவதுடன் மாநகராட்சிகளின் சட்ட விதிகளின் படியும் அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள பிராணிகள் அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய் பற்றக்கூடும் என்றும் அவருக்குத் தோன்றக்கூடிய அல்லது அவருக்கு தெரிந்திருக்கக்கூடிய பிராணிகளை பொதுக்கிணற்று நீர், குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

(ஊ) பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாய் ஆகியவற்றைச் சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் மாநகராட்சிகளின் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) தீ விபத்து நேரும் போது அன்றி ஆணையாளர் அவர்களால் அங்கீகரிக்கப்படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மான குழாயில் உள்ள தடுக்கிதழ்கள் தீயணைப்பு குழாய் அல்லது மாநகராட்சி குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக்குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

(ஏ) பொதுக் குடிநீர் அமைக்கும் இடத்தைச் சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக உடைந்த குடங்கள், டப்பாக்கள் மற்றும் இதர பொருட்களை வைக்கக்கூடாது. பொதுக்குடிநீர் குழாயில் குடங்களைக் கழுவி குடிநீரை வீணாக்கக்கூடாது.

<u>முறையீட்டு உரிமை</u>

இந்த உபவிதிகளின் கீழ் எந்த நபராவது மாநகராட்சி ஆணையாளரின் / மாநகரப் பொறியாளரின் உத்தரவின் படி பாதிக்கப்பட்டால் மாநகராட்சி மன்றத்திற்கு முறையீடு செய்ய உரிமையுண்டு. மாமன்றத்தின் தீர்மானம் முடிவானதும் கட்டுப்பத்தக்கூடியதும் ஆகும்.

கோயம்பத்தூர்,
17–09–2013.

**க. லதா,**
ஆணையாளர்,
கோயம்பத்தூர் மாநகராட்சி

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

# கோயம்பத்தூர் மாநகராட்சி

## குடிநீர் இணைப்பு கோரும் விண்ணப்பம்

அனுப்புநர்

பெறுநர்

ஆணையாளர்,
கோயம்பத்தூர் மாநகராட்சி.

கீழ்க்கண்ட கட்டிடத்தின் சொந்தக்காரர் / குடியிருப்பவர் ஆகிய நான் வீட்டு / வணிக / தொழிற்சாலை உபயோகத்திற்காக குடிநீர் வசதி செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு / வணிக / தொழிற்சாலை உபயோகத்திற்கு எடுக்கப்படும் நீரில் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினால் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தச் சம்மதிக்கிறேன். மேலும், நிர்வாகத்தினரால் நிர்ணயம் செய்யப்படும் மேற்பார்வை கட்டணம் / சாலை பராமரிப்புக்கட்டணம் செலுத்தவும் சம்மதிக்கிறேன். குடிநீர் இணைப்பு சம்பந்தமாக மாநகராட்சி துணை விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொள்வேன் எனவும் உறுதி கூறுகிறேன். இவ்வாறாகச் செய்து தரப்படும் குடிநீர் வசதிக்கான ஒப்பந்தத்தை நான் ரத்து செய்ய விரும்பும் பட்சத்தில் நிர்வாகத்தினருக்கு ஒரு மாதம் முன்னதாக எழுத்து மூலம் அறிக்கை கொடுக்க உறுதி கூறுகின்றேன்.

வீட்டு சொந்தக்காரர் / குடியிருப்பவர் கையொப்பம்

இடம்:

நாள்:

(ஒப்பம்)
ஆணையாளர்

(ஒப்பம்)
வணக்கத்திற்குரிய மேயர்